பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**25 02 2026** **6 45**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சணலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டிருப்பது, சணல் விவசாயிகளுக்கு பெரிதும் பயன் அளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தமிழகத்தில் ஜல்ஜீவன் இயக்கத்தின் கீழ் ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வங்கிகளில் கடந்த **5** ஆண்டுகளில் காலியாக இருந்த **13** ஆயிரம் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாக மாநில கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே.ஆர். பெரிய கருப்பன் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் திமுக ஆட்சியில் ஜவுளித்துறை முடங்கியுள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

**5.** தேசிய சீனியர் கபடிப் போட்டியில் தமிழக அணி மணிப்பூர் அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சணலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டிருப்பது சணல் விவசாயிகளுக்குப் பெரிதும் பயன் அளிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சணல் விவசாயிகளின் வாழ்க்கையை எளிதாக்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

குறைந்தபட்ச ஆதரவு விலையை அதிகரிக்க எடுக்கப்பட்டுள்ள முடிவு, உற்பத்தியையும் தரத்தையும் அதிகரிக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது நாடு முழுவதும் இதில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் ரயில்வே கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் அரசு உறுதிபூண்டுள்ளது என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக மத்திய அமைச்சரவை மேற்கொண்ட முடிவுகள், பல்வேறு மாநிலங்களில் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவதுடன், வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாவை அதிகரிக்கும் என திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் ஜல்ஜீவன் இயக்கத்தின் கீழ் ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் மத்திய மக்கள் தொடர்பகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட மத்திய அரசின் நலத்திட்டங்கள் வழங்கும் விழாவில் பேசிய அவர், தமிழகத்தில் 40 லட்சம் இலவச சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

(வாய்ஸ் பைட் - எல். முருகன் - 33 செகண்ட்ஸ்)

<<<<>>>>

கூட்டுறவுத்துறை சார்பில் நடந்த SRB மற்றும் DRB தேர்வு முடிவுகளை மாநில அரசு உடனடியாக வெளியிட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தேர்வு முடிந்து 100 நாட்கள் கடந்த பின்னும் முடிவுகள் வெளியிடப்படவில்லை என்று கூறியுள்ளார்.

தேர்வு எழுதியவர்களின் எதிர்காலம் குறித்து அலட்சிப் போக்குடன் மாநில அரசு செயல்படுவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<>>>>

கூட்டுறவு வங்கிகளில் கடந்த 5 ஆண்டுகளில் காலியாக இருந்த 13 ஆயிரம் பணயிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாக மாநில கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே.ஆர். பெரிய கருப்பன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் தவிர பிற சங்கங்களில் 2 ஆயிரத்து 400 பணியிடங்களும், நியாயவிலைக் கடைகளில் சுமார் 8 ஆயிரத்து 700 பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது கூட்டுறவுத்துறை சார்பில் நடத்தப்பட்ட தேர்வுகள் குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளதால்தான் முடிவுகள் வெளியிடப்படவில்லை என்று அவர் விளக்கமளித்துள்ளார்.

இந்த வழக்கில் தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், இறுதித் தீர்ப்பு வெளியான பின்னர் தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் என்றும் திரு. பெரியகருப்பன் கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக ஆட்சியில் ஜவுளித் துறை முடங்கியுள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்தில் 600க்கும் மேற்பட்ட ஜவுளி ஆலைகள் மூடப்பட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக மத்திய ஜவுளி அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சியாக இருந்தபோது மின் கட்டண உயர்வுக்கு கண்டனம் தெரிவித்த திரு மு.க. ஸ்டாலின், முதலமைச்சராகப் பதவியேற்ற பின் ஆண்டுக்கொருமுறை மின்கட்டணத்தை உயர்த்தி இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இதனால் பாரம்பரிய ஜவுளித்துறை முற்றிலுமாக முடங்கி இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் உற்பத்தியை முடக்கிவிட்டு, முதலீடுகளை ஈர்ப்பதாகக் கூறி முதலமைச்சர் வெளிநாடுகளுக்குப் பயணிப்பதாக அவர் கூறியுள்ளார்.

இதுதான் நல்லாட்சிக்கு இலக்கணமா என்றும் திரு நயினார் நாகேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

<<<<>>>>

தேசிய வாத்சல்யா ஆசீர்வாத் சேமிப்பு திட்டம், குழந்தைகளின் எதிர்காலத்துக்குப் பெரிதும் பயன் அளிக்கும் என்று தேசிய ஓய்வூதியத் திட்ட முதன்மைப் பொது மேலாளர் திரு. மோகன் காந்தி கூறியுள்ளார்.

திருச்சி மாவட்ட நல நிதி அலுவலகத்தில் நடைபெற்ற இத்திட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

(வாய்ஸ் பைட் - மோகன் காந்தி - 50 செகண்ட்ஸ்)

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

அமெரிக்காவின் கிழக்குக் கடலோரப் பகுதிகளில் வீசிய கடும் சூறாவளி காரணமாக 6 லட்சத்துக்கும் அதிகமான வீடுகளுக்கு மின் வினியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

--------------

பிரதமர் திரு நரேந்திர மோடியை மணிப்பூர் முதலமைச்சர் திரு யும்நாம் கெம்சந்த் சிங், புதுதில்லியில் நேற்று சந்தித்துப் பேசினார்.

--------------

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இரண்டு நாள் பயணமாக இன்று ஜம்மு-கஷ்மீர் செல்கிறார்.

--------------

வளைகுடா ஒத்தழைப்புக் கவுன்சில் தலைவர் ஜெனரல் ஜசீமு முகமது அல் புதைவியுடன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் புதுதில்லியில் நேற்று ஆலோசனை நடத்தினார்.

--------------

இன்று முதல் மூன்று நாட்களுக்கு பீகார் மாநிலத்தில் பயணம் மேற்கொள்ளும் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, அங்கு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.

--------------

மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தில்லியில் இன்று வேளாண் அறிவியல் விழாவைத் தொடங்கி வைக்கிறார்.

--------------

நிலையான வளர்ச்சி தொடர்பான சர்வதேச மாநாட்டை புதுதில்லியில் மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் இன்று தொடங்கி வைக்கிறார்.

--------------

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை மாநில அமைச்சர் திரு சக்கரபாணி தொடங்கி வைத்தார்.

--------------

தேனியில் சட்டப்பேரவைத் தேர்தல் முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் திரு. ரஞ்சித் சிங் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

--------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், உற்பத்தியாளர்களுக்கான கொள்முதல் ஊக்கத் தொகையை மாநில அமைச்சர் திரு டி.ஆர்.பி. ராஜா வழங்கினார்.

--------------

நகைகளுக்கான தர நிலைகள் குறித்த நகை விற்பனையளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி ராணிப்பேட்டையில் தர நிர்ணய அமைப்பின் சார்பில் நடத்தப்பட்டது.

--------------

கிருஷ்ணகிரியில் மா சாகுபடி குறித்த மாவட்ட அளவிலான கருத்தரங்கு ஆட்சியர் திரு. தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது.

--------------

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் சட்டப்பேரவைத் தொகுதியில் பல்வேறு வாக்குச்சாவடி மையங்களில் மாவட்ட ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சியாமளாதேவி ஆய்வு செய்தனர்.

--------------

சென்னை எண்ணூர் கத்திவாக்கத்தில் புதுப்பிக்கப்பட்ட பேருந்து நிலையத்தை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

--------------

சென்னையில் காவலர் குறைதீர்ப்பு முகாம் மாநகர காவல் ஆணையர் திரு அருண் தலைமையில் நடைபெற்றது.

--------------

சென்னையில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் வரும் 28-ம் தேதி சைதாப்பேட்டையில் உள்ள தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திருமதி ராஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

--------------

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் சில இடங்களிலும், வட மாவட்டங்களின் ஒரிரு இடங்களிலும் இன்று லேசான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் அதிகாலை நேரங்களில் இன்றும், நாளையும் லேசான பனிமூட்டம் நிலவக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

--------------

*விளையாட்டுச் செய்தி*

தேசிய சீனியர் ஆடவர் கபடிப் போட்டியில் தமிழக அணி மணிப்பூர் அணியை வென்றது.

குஜராத்தின் வதோதராவில் நேற்று தொடங்கிய இப்போட்டியில் தமிழகம் **75-16** என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்றது.

நேற்று நடைபெற்ற மற்ற ஆட்டங்களில் சண்டிகர்-ஜார்கண்டையும், ரயில்வே அணி - ஒடிசாவையும், பஞ்சாப் - குஜராத்தையும், உத்தரப்பிரதேசம் - விதர்பா அணியையும் வென்றன.

**<<<<The End>>>>**